# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 11.09.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

***அல்லாஹ் கூறுகின்றான்:*** *இந்தக் குர்ஆனை ஏதாவதொரு மலையின் மீது நாம் இறக்கியிருந்தால் நிச்சயமாக நீர் அதனைப் பணிவுள்ளதாகவும், அல்லாஹ்வின் பயத்தால் பல்வேறு துண்டுகளாகத் தகர்ந்துவிடக் கூடியதாகவும் கண்டிருப்பீர். மக்கள் சிந்தனை செய்யும் பொருட்டு அவர்களுக்காக நாம் விளக்கும் உவமைகள் இவை. (59:22)*

சிலரின் இதயங்கள் எந்த அளவுக்கு கடினமாகி விடுகின்றன என்றால், அவர்களின் மேல் திருக்குர்ஆனின் தாக்கம் ஏற்படுவதில்லை. இறைவன் நான் ஓதிய இந்த வசனத்தில் கூறியுள்ளான். நாம் இந்த குர்ஆனை மலையின் மீது இறக்கி இருந்தால் அதுகூட பயத்தால் தூள்தூளாகி விடும். ஆக, இறைவனின் இந்த குர்ஆனின் மூலம் என்ன நிரூபணம் ஆகிறது என்றால், சிலருடைய இதயம் மலையை விடவும் அதிக கடினமாக இருக்கின்ன. அவர்கள் படைக்கப்பட்ட நோக்கத்தை மறந்து விடுகின்றனர். தன்னைப் படைத்தவனை மறந்து விடுகின்றனர். தங்களுடைய முடிவை மறந்து விடுகின்றனர். சூரா பக்கராவில் மனித இதயங்களின் கடினம் தொடர்பாக **இறைவன் கூறுகின்றான்.**

*இதன் பின்னர் உங்கள் உள்ளங்கள் கடினமடைந்து, அவை கற்களைப் போன்று அல்லது அதைவிட கடினமானதாக ஆகிவிட்டன. நிச்சயமாக சில கற்கள் உள்ளன. அவற்றிலிருந்து ஆறுகள் பொங்கி ஓடுகின்றன. இன்னும் சில (கற்கள்) உள்ளன. அவை உடைந்தால் அவற்றிலிருந்து நீர் ஓடும். அவ்வுள்ளங்களுள் சில உள்ளன. அவை இறையச்சத்தால் (மன்னிப்புக்கோரி) விழுந்து விடுகின்றன. நீங்கள் செய்து கொண்டிருப்பது பற்றி அல்லாஹ் ஒருபோதும் கவனமற்றவன் அல்லன். (2:75)*

ஆக, இறைவன், இறைநியதிகள், மற்றும் இறைவனின் வேதம், பல்வேறுபட்ட இறை நியதிகள் இவைகளின் தாக்கம் உயிரற்றவையின் மீதும் இருக்கின்றன. ஆனால் மனிதனின் உள்ளம் எந்த அளவுக்கு கடினமடைந்து விடுகிறது என்றால் இறைவனின் தக்தீரைப் பார்த்த பின்பும் கூட தன்னில் மாற்றத்தைக் கொண்டு வர விரும்பவில்லை. சூரா பக்கராவின் இந்த வசனத்தில் யூதர்களைப் பற்றி கூறப்படுகிறது. இந்த எடுத்துக்காட்டு வெறும் சம்பவம் அல்ல. மாறாக முன்னறிவிப்பும் கூட. நீங்கள் இறைவனின் பயத்தை உங்களில் உருவாக்கமாட்டீர்களாயின் உங்களுடைய இதயமும் இது போன்றே கடினமாக இருக்கும். இன்றைய சூழ்நிலையைப் பார்த்தால் முஸ்லிம்களுக்கு கூட இது வருத்தப்படக்கூடிய நேரமாகும்.

ஐரோப்பிய உலகம் தங்களுடைய பேச்சுகளில் முஸ்லிம்களை அழைத்தாலும் சரி, முஸ்லிம்கள் தங்களுடைய விழாக்களில் அவர்களை அழைத்தாலும் சரி, ஐரோப்பிய அரசியல்வாதிகள் முஸ்லிம்களைப் புகழ்கின்றனர். ஆனால், எப்பொழுது மொத்தத்திற்கும் ஒரு முடிவு எடுக்கும் நேரம் வரும்பொழுது அவர்களின் விருப்பத்திற்கு ஏற்பவே முடிவு எடுக்கப்படுகின்றன. முஸ்லிம்களின் நலனை கவனத்தில் கொள்வதில்லை. இவையனைத்தும் ஏன் நடக்கின்றன? முஸ்லிம்களின் நிலை இரண்டாம் மற்றும் மூன்றாவது இடத்தில் உள்ளது. இவர்கள் தங்களுடைய நாடுகளில் ஆட்சி நடத்துவதற்கு கூட மற்ற நாடுகளைப் பார்க்கின்றனர். பிறகு வானம் மற்றும் பூமியின் அழிவுகள் வருகின்றன. இவை அனைத்தும் ஏன்? நான் ஓதிய சூரா ஹஷ்ரின் வசனத்திற்கு முன்னால் உள்ள வசனத்தில் மூஃமின்களை நோக்கியே இறைவன் கூறுகிறான்.

இறையச்சத்தை மேற்கொள்வதன் பக்கம் கவனமூட்டப்பட்டுள்ளது. நாளைக்காக சிலவற்றை முன்னால் அனுப்பப்படுவதன் பக்கம் கவனமூட்டப்பட்டுள்ளது. மறுமை மற்றும் மறுமையின் அச்சம் பற்றி

கவனமூட்டப்பட்டுள்ளது. இறைவனின் நினைப்பு பற்றி கவனமூட்டப்பட்டுள்ளது. இதன் பக்கம் கவனம் செலுத்தவில்லை என்றால் நீங்கள் உங்களுடைய அடையாளத்தை உங்கள் கையாலேயே இழந்து விடுவீர்கள் என்று கூறப்பட்டுள்ளது. குழப்பத்தில் விழுந்து இழிவை எதிர்கொள்ளும் நிலை ஏற்படும். எனவே உணருங்கள்; மேலும் ஷய்த்தானின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். மேலும் உங்கள் உள்ளங்களின் கடினத்தை இறைவனை நினைவு கூறுவதைக் கொண்டு நிரப்பி, அதனை மிருதுவானதாக ஆக்குங்கள். ஆனால் ஷய்த்தான் எந்த அளவுக்கு விருப்பமானவனாய் இருக்கின்றான் என்றால், உண்மையைப் புரிந்து கொள்ள விரும்புவதில்லை.

**இறைவன் ஓரிடத்தில் இதனை இவ்வாறு குறிப்பிடுகின்றான்:**

*ஆனால் அவர்களின் உள்ளங்கள் (மேலும்) கடினமாகி விட்டன. மேலும் அவர்கள் செய்து கொண்டிருந்ததை ஷய்த்தான் அவர்களுக்கு அழகுமிக்கதாய்க் காட்டினான். (6:44)*

ஒவ்வொரு அழிவிலிருந்தும், ஒவ்வொரு துன்பத்திலிருந்தும் விலகுவதற்குப் பதிலாக இருளில் மீண்டும் விழுகின்றனர். குழப்பத்தின் பக்கம் அதிகமாக செல்கின்றனர். பாகிஸ்தானிலும் இன்றைய தினங்களில் சப்தம் எழுப்புகின்றனர். எல்லா இடங்களிலும் அடிதடிகள் நடக்கின்றன. சில இடத்தில் மின்சாரத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர். சில இடத்தில் மற்ற கொடுமைகளுக்கு எதிராக, சில இடங்களில் விலை உயர்வுக்கு எதிராக, சில இடங்களில் வேறு சில அழிவுகள் நடக்கின்றன. இதைப்பற்றி மற்றவர்களுக்கு எந்தக் கவலையும் இல்லை. பத்திரிகைகளில், நாம் அழிவின் முடிவின் பக்கம் வேகமாக சென்று கொண்டிருக்கிறோம் என்று எழுதப்படுகின்றன. இவை அனைத்திற்கு காரணம் என்ன? இதற்கான மிகப்பெரியதொரு காரணத்தை நான் இப்போது கூறுகிறேன். காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்வது ஒருபக்கம் இருக்கட்டும். சட்டத்தைக் காரணம் காட்டி காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ளும் மக்களை கொடுமைப்படுத்துவதாகும். அந்த கொடுமைகளை முதலில் நிறுத்துங்கள். ஒவ்வொரு அரசுத்தாள்களிலும் காலத்திற்கு இமாமிற்கு எதிராக எழுதப்படும் அனைத்து ஏச்சுப் பேச்சுக்களையும் நிறுத்துங்கள். இல்லையென்றால் இறைவனின் நியதி தன்னுடைய நேசத்திற்குரியவர்களுக்காக அதனுடைய வேலையைச் செய்கிறது. ஏதாவது ஒரு முஸ்லிம் அல்லாதவர் கழுத்தில் லாக்கெட் அணிந்திருந்திருப்பார். பாகிஸ்தானில் மற்றவர் அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெயரை உச்சரிப்பதால் மிகவும் சந்தோஷம் அடைகின்றனர். ஆனால் அஹ்மதி அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் பெயரை தங்களுடைய பள்ளிவாயிளிலும், வீடுகளிலும் எழுதினால் அதை உடைத்து அசிங்கமான சாக்கடைகளில் வீசப்படுகின்றன. அப்போது அவர்களுக்கு இறைவனின் பெயருக்கு மரியாதைக்குறைவு இந்த அரசாணையால் ஏற்படுகிறது என்ற சிந்தனை இருப்பதில்லை. அந்த வேளையில் அவர்களுக்கு ரஸூல் தென்படவில்லை. எனவே எப்பொழுது இவர்களுக்கு இந்த விஷயங்கள் தென்படவில்லையோ இறைவனின் நியதியும் தன்னுடைய வேலையைக் காட்டுகிறது. பாகிஸ்தானில் ஆலிம்கள் என்று அழைக்கப்படுகின்றவர்களின் நிலை என்னவென்றால், ஒரு நிகழ்ச்சி நடத்துபவர் முபஷ்ஷிர் லுக்மான் சாஹிபின் நிகழ்ச்சியில் அஹ்மதிகள் பற்றி பேச்சு வரும்போது ஒரு ஆலிம் கூறுகிறார். Coco Colo கம்பெனிக்கு ஒரு Trade Mark உள்ளது. அதனை வேறு ஏதேனும் ஒரு கம்பெனி Trade Mark -ஐ உருவாக்க முடியாது. அவ்வாறு செய்தால் பிடிபட்டு விடும். இதுபோல் நாமே முஸ்லிம்கள் என்று அழைக்கப்பட முடியும். அஹ்மதிகள் தங்களை முஸ்லிம்கள் என்று கூறினால் அவர்களுக்கு தண்டனை கிடைக்கும் என்று கூறுகின்றார்.

இந்த ஆலிம்கள் எப்படிப்பட்ட ஃபத்வா – மார்க்கத் தீர்ப்பு கொடுப்பவர்கள் என்றால் இவர்கள் பற்றி ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு காலத்தில் மிகவும் அறிவற்ற மனிதர்களை மக்கள் தங்களுடைய தலைவர்களாக ஆக்கிக் கொள்வார்கள். மேலும் அவர்களிடம் சென்று பிரச்சனைக்கு தீர்வு கேட்பார்கள். அவர்கள் அறிவற்ற மார்க்கத் தீர்ப்பு வழங்குவார்கள். ஆக அவர்களும் வழிகேட்டில் இருப்பார்கள்; மக்களையும் வழிகெடுப்பார்கள். முஸ்லிம்கள் யார்? இதுபற்றி மிகப்பெரிய அறிவுப்பூர்வமான விவாதத்தில் ஈடுபட நான் விரும்பவில்லை. ஆனால் இது தெளிவாக வேண்டும். ஹஸ்ரத்

ரஸுல் கரீம் (ஸல்) அவர்களுக்கு முழுமையாகக் கீழ்ப்படிபவர்கள், அவர்களின் அனைத்து நடைமுறைகளையும் பேணுபவர்கள், குர்ஆனின் அனைத்து கட்டளைகளையும் பின்பற்றுபவர்கள் (உலகில்) இருக்கின்றார்கள் என்றால், அது அஹ்மதிகளே ஆவார்கள். இது சம்பந்தமாக இரண்டு ஹதீஸ்களை எடுத்து வைக்கின்றேன். இதில் முஸ்லிம்களின் அறிமுகம் பற்றி ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இதுவே உண்மையான அறிமுகம் ஆகும். அந்த ஆலிம்களில் எவர்கள் Coco Cola –ன் பெயரை இஸ்லாத்துடன் இணைக்க விரும்புகிறார்களோ? அவர்களுடைய விளக்கம்போல் ஒருபோதும் இருக்க முடியாது. அறிவீனத்தின் எல்லையை அவர்கள் அடைந்து விட்டனர். இதிலிருந்து முஸ்லிம் யார் என்று தெளிவாகி விடும்.

ஒரு ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதை கேட்டேன்.

எவர் அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் இல்லை என்று ஏற்றுக் கொண்டாரோ, மேலும் இறைவனைத் தவிர எவைகள் வணங்கப்படுகின்றனவோ அவற்றை நிராகரிப்பாரோ, அவருடைய உயிரும் பொருளும் மரியாதைக்குரியவையாகி விடுகின்றன. அவர்களுக்கு சட்டப்பூர்வமாக தகுதி கிடைத்து விடுகிறது. மற்றபடி அவருடைய கணக்கு வழக்கு (என்பது) இறைவனின் பொறுப்பாகும். அவனே யாருடைய நிய்யத் என்ன என்பதை நன்கு அறிகின்றான். மேலும் அவனுடைய எண்ணத்திற்கேற்ப அவனுக்கு கூலி வழங்குகின்றான். கலிமாவாகிய லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறிய பிறகு அவன் மனிதர்களின் பிடியிலிருந்து விடுபடுகிறான்.

பிறகு மற்றொரு ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

எவர் நம்மைப்போன்று தொழுகின்றாரோ மேலும் நமது கிப்லாவின் பக்கம் முகத்தை திருப்பினாரோ மேலும் நாம் அருந்துவதை உண்பாரோ அவர் முஸ்லிம் ஆவார். அவனுடைய நிலையின் பொறுப்பை அல்லாஹ் மற்றும் அவனுடைய ரஸுல் (ஸல்) ஏற்றுள்ளார்கள். எனவே இறைவனின் பொறுப்புக்கு மரியாதைக் குறைவை ஏற்படுத்தாதீர்கள். அதை அர்த்தமற்றதாக்கி விடாதீர்கள். அதனுடைய மதிப்பை குறைத்து விடாதீர்கள்.

எனவே இப்படிப்பட்ட ஆலிம்களிடம் நான் வேண்டிக்கொள்வது என்னவென்றால் அல்லாஹ், ரஸுல் கூறிய விளக்கத்திற்கு மாற்றமாக உங்களுடைய கருத்தை கூறாதீர்கள். முஸ்லிமிற்கு அல்லாஹ் மற்றும் அவனுடைய ரஸுல் கூறிய அறிமுகமே உண்மையாகும்.

இந்த அறிமுகத்தின் கீழ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களை முஸ்லிமாக்கியுள்ளார்கள். இதன் பிறகு எங்களுக்கு எந்த ஆலிமுடைய Certificate –ன் அவசியமும் இல்லை. மேலும் எந்த பார்லிமெண்டினுடைய Certificate –ன் அவசியமும் இல்லை.

இது சம்பந்தப்பட்ட இன்னொரு விஷயத்தையும் கூறி விடுகிறேன். கடந்த நாட்களில் ஏதோ பத்திரிகையின் செய்தியைக் குறித்து எனக்கு அனுப்பியிருந்தார். யாரெல்லாம் அதனைப் படித்தார்களோ அவர்கள் அதனை எனக்கு நகல் எடுத்து அனுப்பியிருந்தார்கள். அஹ்மதிகளுக்கு இதுபோன்ற செய்திகளை எனக்கு தெரிவிக்கும் ஆர்வமும் உண்டு. இல்லை இதுபற்றி எனது கருத்தை அறியவும் கூட ஆர்வம் உண்டு. அந்த செய்திகள் என்னவென்றால், அல்தாஃப் ஹுஸைன் சாஹிப் உடைய கூற்று இதுவாகும். அவர் அவர்களுடைய தலைவர் ஆவார். அவர் அஹ்மதிகளின் வழக்கில் வெளிப்படையாக கூறியுள்ளார். மேலும் பாகிஸ்தானில் அஹ்மதிகளுக்கு என்ன கொடுமைகள் இழைக்கப்படுகிறதோ அதை வன்மையாகக் கண்டித்துள்ளார்கள். அஹ்மதிகள் பற்றி தவறாக கூறப்படுகிறது என்றும் கூறியுள்ளார்.

இதைக் கண்ட மற்றொரு செய்தித்தாள் எவ்வாறு விமர்சித்துள்ளது என்றால் இந்த பத்திரிகைகளுக்கு இவ்வாறு இதை பெரிதாக்கும் ஆர்வம் உண்டு. அந்த செய்தியில் எவ்வாறு கூறப்பட்டுள்ளது என்றால், மிர்ஸா

மஸ்ரூர் அஹ்மத் மற்றும் அல்தாஃப் ஹுஸைன் இருவரின் சந்திப்பு இலண்டனில் நடைபெற்றது. இருவரும் கூடி ஒரு திட்டத்தை தீட்டியுள்ளார்கள். அதாவது எவ்வாறு பஞ்சாப் மற்றும் பாகிஸ்தானில் அஹ்மதிய்யத்தை உறுதிப்படுத்த வேண்டும். எதுவரை அல்தாஃப் ஹுஸைன் சாஹிபின் அறிக்கை இருந்ததென்றால், எவ்வாறு ஒவ்வொரு பாகிஸ்தானியும் தனது நாட்டில் அமைதி நிலவ வேண்டும்; குழப்பங்கள் தீர வேண்டும்; பிரிவினைகள் மற்றும் மார்க்கப் பகைமைகளை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்று எண்ணுவானோ அவ்வாறே அவர்களின் திட்டம் இருந்து என்று எழுதியுள்ளனர்.

இது மிகவும் மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். அல்தாஃப் ஹுஸைன் சாஹிப் இவ்வாறு அறிவித்ததால் எனகது மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. அவர் வீரத்தை காட்டியுள்ளார்கள். மாறாக இந்த தடவை மிகச் சிறந்ததொரு கருத்தைக் கூறியுள்ளார்கள். இதிலிருந்து என்ன நிரூபணம் ஆகிறது என்றால், அவர் நாட்டில் அமைதியைப் பார்க்க விரும்புகின்றார். இறைவனே நன்றாக அறிவான். யார் மீதும் சந்தேகம் கொள்ள முடியாது. நாடு முன்னேற வேண்டும் என்பதற்காக அவர் பிரிவினைகள் மற்றும் மார்க்கப் பகைமைகளை முடிவுக்கு கொண்டு வர விரும்புகின்றார். அல்லாஹ் அவருடைய இந்த நல்ல நோக்கத்தை வெற்றி பெறச் செய்வானாக. மேலும் அவர் எப்போதுமே அரசியல் அல்லது அரசியல் விவகாரங்களுக்கு நடுவில் மாட்டிக் கொள்ளாமல் இருக்கச் செய்வானாக. நேற்று இரவு டி.வி. பார்த்துக் கொண்டிருந்தேன். அதில் என்ன செய்தி வந்து கொண்டிருந்தது என்றால், அவர் தஹப்புஸே கத்மே நுபுவ்வத் ஆலிம்களுடனான பேச்சுவார்த்தையில் இவருக்கு திருப்தி ஏற்பட்டு அவருடைய ஏதோ ஒரு கூற்றின் மூலம் ஆலிம்கள் மகிழ்ச்சி அடைந்து விட்டனர். மவ்லவிகளின் ஆட்சியின் நிலை என்னவென்றால், கடந்த நாட்களில் பாகிஸ்தானின் பிரதம மந்திரியின் கூற்று வந்தது. அதில் அவர் என்ன கூறினார் என்றால், நான் இன்னின்ன வேலைகள் நடக்க வேண்டும் என்று நினைக்கிறேன். ஆனால் ஆலிம்களைப் பற்றி எனக்கு பயமாக இருக்கிறது. இதுவே பிரதம மந்திரிக்கு இருக்கும் சக்தியின் நிலையாகும். அல்தாஃப் சாஹிபுடன் என்னுடைய சந்திப்பு பற்றி கூற வேண்டுமானால், ஏற்கனவே நான் கூறியது போன்று பரபரப்பை ஏற்படுத்துபவர்கள் பகலிலும் கனவு காண்கின்றனர். அவ்வாறு ஏதேனும் சந்திப்பு நடந்திருந்தால் அல்தாஃப் சாஹிபை பேட்டி எடுத்த போது அதில், நான் மிர்ஸா சாஹிபை சந்தித்தேன் என்று கூறியிருப்பார்.

ஆம்; நான் நிச்சயமாக என்ன கூற விரும்புகின்றேன் என்றால், எவராவது நாட்டைக் காப்பாற்ற விரும்புகின்றாரோ அல்லது இந்தப் பகைமையின் சுவரை உடைக்க விரும்புகின்றாரோ அல்லாஹ் அவரின் அந்த முயற்சியை வெற்றி பெறச் செய்வானாக. நமக்கு நாட்டின் மீது நேசம் உள்ளது. நாம் அதை உருவாக்குவதிலும் பங்கு வகித்துள்ளோம். மேலும் அதை தொடர்வதற்கும் அனைத்து தியாகங்களையும் செய்வோம்; செய்து வருகின்றனர் – இன்ஷா அல்லாஹ். இதுபோன்ற தலைவர்களை நாட்டில் உருவாக்க வேண்டும் என்று ஒவ்வொரு அஹ்மதியும் துஆ செய்து வர வேண்டும். அஹ்மதிகளின் மீது செய்யப்படும் கொடுமைகளைப் பற்றி கூற வேண்டும் என்றால், அதை நீக்குவதற்கு நாம் அந்த பொறுப்பை இறைவனிடம் ஒப்படைத்து விட்டோம்.

அவ்வாறு நாம் ஏதும் வேண்டுகிறோம் என்றால் அது நம்முடைய நேசத்திற்குரிய ரப்பிடம் ஆகும். இறைவன் எந்த திட்டத்தை உருவாக்குவானோ அல்லது உருவாக்குகின்றானோ அதன் முன் இந்த உலகவாதிகள் உருவாக்கும் அனைத்து திட்டங்களும் ஒன்றுபோல் இல்லை என்பது நமது உறுதியான நம்பிக்கையாகும். மேலும் இன்ஷா அல்லாஹ் நிச்சயமாக மேலும் நிச்சயமாக பாகிஸ்தான் மற்றும் அனைத்து முஸ்லிம் நாடுகளிலும் அந்த இறை நியதி அஹ்மதிய்யத்தின் ஹக்கில் வெளிப்படும். மேலும் உண்மையான முஸ்லிம்கள் யார் என்பது தானாகவே பகல் வெளிச்சம் போல் தெளிவாகி விடும். எனவே நான் அஹ்மதிகளிடம் கூறுவது, குறிப்பாக பாகிஸ்தானிய அஹ்மதிகளிடம் அவர்கள் பாகிஸ்தானில் வசிப்பவர்களாக இருந்தாலும் சரி, பாகிஸ்தானுக்கு வெளியில் வசிப்பவர்களாக இருந்தாலும் சரி, நாட்டு மக்களுக்கு அறிவை வழங்குவாயாக எனவும், நாடு விழுந்துள்ள இந்த மோசமான நிலையிலிருந்து மீளுவதற்காகவும் துஆ செய்து வாருங்கள். இது போன்று மற்ற இஸ்லாமிய நாடுகள் இருக்கின்றன; அரபு நாடுகள் இருக்கின்றன. அவர்களுக்காகவும்

துஆ செய்து வர வேண்டும். அங்கு வசிக்கின்ற அஹ்மதிகள் குறிப்பாக ரமலான் மாதத்தில் அல்லது துஆக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய இந்த நாட்களில், இறைவனின் நெருக்கத்தைப் பெறக்கூடிய இந்த நாட்களில் இறைவன் தனது இறை நியதியை வெளிப்படுத்துவதை நமக்கு விரைவில் காட்டுவானாக என்று துஆ செய்து வர வேண்டும். இப்போது நான் மீண்டும் நான் ஓதிய வசனத்தின் பக்கம் வருகின்றேன். முஸ்லிம்கள் யார் என்பதைப் பற்றி அறிவதில் அதிக நேரம் ஆகி விட்டது. ஆனால் இதைக் கூறுவதும் அவசிமாகி விட்டது.

**அல்லாஹ் கூறுகின்றான்:** *இந்தக் குர்ஆனை ஏதாவதொரு மலையின் மீது இறக்கியிருந்தால் நிச்சயமாக நீர் அதனை பணிவுள்ளதாகவும், அல்லாஹ்வின் பயத்தால் பல்வேறு துண்டுகளாகத் தகர்ந்துவிடக் கூடியதாகவும் கண்டிருப்பீர். (59:22)*

**இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

முதலாவதாக இதன் பொருள் என்னவென்றால், திருக்குர்ஆனின் தாக்கம் எந்த அளவுக்கென்றால் அதை மலை மீது இறக்கி இருந்தால் கூட அது துண்டு துண்டுகளாகி இருக்கும். இவை அனைத்தும் பூமியோடு இணைந்து விடும். உயிரற்றவையில் இதுபோன்றே தாக்கம் இருக்குமேயானால், இந்த தாக்கத்திலிருந்து பயன் பெறாதவர்கள் முட்டாள்களேயாவார்கள். மேலும் இதன் இரண்டாவது பொருள் என்னவென்றால், ஒரு மனிதனில் எதுவரை இரு பண்புகள் உருவாகவில்லையோ அதுவரை அவர் இறைவனின் விருப்பத்தைப் பெறவே இயலாது. முதலாவது தகப்புர் – அகங்காரத்தை உடைத்தெரிவது, எவ்வாறு தலையை உயர்த்தி வைத்துள்ள மலை உடைந்து பூமியுடன் சேர்ந்து விடுகின்றதோ அவ்வாறே மனிதனும் தனது தலையை தவறுகள் மற்றும் அகங்காரத்தை விட்டும் நீக்க வேண்டும். பணிவு மற்றும் ஒன்றுமற்ற தன்மையை ஏற்படுத்த வேண்டும். இரண்டாவது, அவனுடைய அனைத்து பழைய தொடர்புகள் அதாவது தவறுகள், அழுக்குகள், எவையெல்லாம் இறை விருப்பத்திற்கு எதிராக இருந்தனவோ அவை அனைத்தையும் நம்மிடமிருந்து பிரித்து விட வேண்டும். எவ்வாறென்றால் மலை உடையும் போது ஒரு கல் மற்ற கல்லிலிருந்து பிரிந்து விடுகின்றதோ அவ்வாறே பிரிந்து விட வேண்டும். அந்த அனைத்து தொடர்புகளும் இப்போது அவனுடைய சந்திப்பு, பாசம், வெறுப்பு இவை அனைத்தும் முழுக்க முழுக்க இறைவனுக்காகவே ஆகி விட வேண்டும். எனவே இந்த அகங்காரத்தை உடைத்தெறியும் அவசியம் உள்ளது. பிறகு நான் இந்த பெயர்தாங்கிய ஆலிம்களுக்கு கூறுகின்றேன். விஷயம் மறுபடியும் அங்கேயே திரும்புகிறது.

அல்லாஹ் மற்றும் அவனுடைய ரஸூல் (ஸல்) அவர்களின் மீது அன்பை வெளிப்படுத்த (விரும்பு)கின்றீர்கள் என்றால், நீங்கள் காலத்தின் இமாமுடன் தன்னை இணைத்துக் கொள்வது அவசியமாகும். பிறகு மேற்கு, கிழக்கு, தெற்கு மற்றும் வடக்கு (என நாலாபுறமும்) மதிப்புடன் பார்க்கப்படுவீர்கள் என்பதை பாருங்கள். அப்போதுதான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மீது இறக்கப்பட்ட எந்த பரிசுத்த வேதத்தின் அனைத்து விஷயங்களும் புரியும். அதனுடைய அறிவு உங்களுக்கு கிடைக்கும். ஏனென்றால் குர்ஆனை புரிவதற்குக் கூட இறைவனுடைய நேசத்திற்குரியவர்களாகும் அவசியம் உள்ளது.

**அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:**

*நிச்சயமாக இந்தக் குர்ஆன் மேன்மைமிக்கதாகும். (இது) நன்கு பாதுகாக்கப்பட்ட ஒரு நூலில் உள்ளதாகும். தூய்மையக்கப்படுபவர்களைத் தவிர வேறு எவரும் அதனைத் தொடமாட்டார்கள். (அதாவது அதன் மகத்துவத்தையும், உண்மையையும் உணர முடியாது. (56:78,79,80)*

இந்த வசனங்களில் எங்கு முஸ்லிம் அல்லாதவர்களுக்கு குர்ஆனின் மதிப்பு, பெருமையை வெளிப்படுத்தியுள்ளானோ இது எப்படிப்பட்ட குர்ஆன் என்றால், இது ஒரு மிகப்பெரிய பொக்கிஷம் ஆகும். இதனுடைய கல்வி பாதுகாப்பானதாகும். அதாவது இது இறங்கிய காலத்திலிருந்தே இது பாதுகாப்பாக இருந்து வருகிறது. மேலும் இறுதிநாள் (கியாமத்) வரை பாதுகாப்பாக இருக்கும். ஆனால் எவர்கள் தூய மனதோடு

இதிலிருந்து பலன்பெற விரும்புபவர்களே இதிலிருந்து பயனடைவர். அதே சமயம் இங்கு முஸ்லிம்களுக்கும் அறிவுரை உள்ளது. வெறும் முஸ்லிமாக இருந்தால் மட்டும் இதிலிருந்து அருள்பெற முடியாது. எதுவரை தூய மனதோடு அதன்படி செயல்பட மாட்டீர்களோ, மேலும் அதன் முழுமையான அறிவை பெறமாட்டீர்களோ, இந்த மறைந்துள்ள சிற்பியைப் பெறுவதற்கு அந்த தூய்மையானவர்களை தேடமாட்டீர்களோ, எவர்களுக்கு இறைவன் இந்த அறிவை வழங்கியுள்ளானோ அல்லது வழங்குகிறானோ, இந்த காலத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகள், இறைவனின் வாக்குறுதிக்கேற்ப இந்த பதவி வருகின்ற மஸீஹ் மற்றும் மஹ்திக்கே கிடைக்கவிருந்தது; கிடைத்துள்ளது. இறைவனிடமிருந்து நேரடியாக அருளைப் பெற்று அன்னார் இந்த கண்ணியத்திற்குரிய புத்தகத்தின் ஞானங்களை நம்மீது திறந்துள்ளார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த விஷயத்தை விளக்கியவாறு கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆனின் உண்மைகள் மற்றும் ஞானங்கள் எவர்கள் தூய்மை ஆக்கப்பட்டுள்ளார்களோ அவர்கள் மீதே திறக்கின்றன. எனவே இந்த வசனத்திலிருந்து மிகவும் தெளிவாக வெளிப்படுவது என்னவென்றால், குர்ஆனைப் புரிவதற்கு இறைவன் தன்னுடைய கையால் தூய்மையாக்கிய ஒரு முஅல்லிம் – கற்றுக் கொடுப்பவரின் அவசியம் உள்ளது.

குர்ஆனைக் கற்பிப்பவர் தேவையில்லாமல் இருந்திருந்தால் ஆரம்ப காலத்திலும் இருந்திருக்காது. இவ்வாறு ஆரம்ப காலத்தில் குர்ஆனின் கஷ்டமான வார்த்தைகளுக்கு தீர்வு காண கற்பிப்பவரின் தேவையிருந்தது. ஆனால் இப்போது தீர்வு காணப்பட்டு விட்டது. இப்போது இதன் தேவை என்ன? என்று கூறுகிறார்கள். அதற்கு என்ன பதில் என்றால், தீர்வு காணப்பட்டது கூட ஒரு காலகட்டத்திற்கு பிறகு மீண்டும் தீர்வு காணப்படக் கூடியதாக ஆகி விடுகிறது. பிறகு மீண்டும் தீர்வு காணப்படக்கூடியதாக ஆகி விடுகிறது. நடைமுறையாக பாருங்கள். உம்மத்தில் இது வெளிப்பட்டும் விட்டது. ஒருவேளையில் குர்ஆனின் பலநூறு வசனங்கள் ரத்து செய்யப்பட்டவையாக கருதப்பட்டன. பிறகு இறைவன், தனது அடியாரில் எவருக்கு அறிவை வழங்கியுள்ளானோ அவர் அவற்றிற்கு தீர்வு வழங்கிக் கொண்டே இருந்தார்கள். எனவே முஅல்லிமின் அவசியம் இஸ்லாத்தின் வரலாற்றிலிருந்தே நிரூபணமாகிறது. இத்தனை பிரிவினைகளுக்கும் காரணம் கூட ஒவ்வொருவரும் தனக்கென ஒரு கொள்கையை உருவாக்கிக் கொண்டு இதனை இறுதி முடிவாக்கி அதன்படி செயல்பட ஆரம்பித்து விட்டனர். மேலும் அதை மார்க்கத்திலும் நுழைத்து பின் அதில் நிலைபெற்றும் விட்டனர். பெரிய பெரிய பிரச்சனைகள் ஒரு பக்கம் இருக்கட்டும். திருக்குர்ஆனில் தெளிவான கட்டளைகள் இருந்தும் கூட ஒளூ சம்பந்தமாக கூட பலவிதமான முரண்பாடுகள் காணப்படுகின்றன.

**எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

குர்ஆன் அனைத்து அறிவுகளின் உள்ளடக்கம் ஆகும். ஆனால் ஒரே காலத்தில் அதனுடைய அனைத்து அறிவுகளும் வெளிப்பட வேண்டும் என்கிற கட்டாயம் கிடையாது. மாறாக, எந்த பிரச்சனைகளை காலம் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறதோ அந்தப் பிரச்சனைகளுக்கு திருக்குர்ஆனின் அறிவுகள் தீர்வு கொடுக்கின்றன. மேலும் ஒவ்வொரு காலகட்டத்தின் பிரச்சனைகளுக்கு ஏற்ப தீர்வு வழங்கக்கூடிய ஆன்மீக முஅல்லிம்கள் அனுப்பப்படுகின்றனர்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குத்பா இல்ஹாமிய்யாவில் கூறுகின்றார்கள்:**

எங்களுக்கு மஸீஹ் மற்றும் மஹ்தியின் அவசியம் இல்லை என்று கூறுகின்றார்கள். மாறாக திருக்குர்ஆன் எங்களுக்கு போதுமானதாகும். நாங்கள் நேர்வழியில் இருக்கின்றோம். திருக்குர்ஆன் எப்படிப்பட்ட வேதம் என்றால் தூயமையாளர்களைத் தவிர அதனை வேறெவரும் புரிய முடியாது. இறைவனுடைய கையால் தூய்மைப்படுத்தப்பட்ட மேலும் எவரை இறைவன் பார்வையுள்ளவராக ஆக்கி உள்ளானோ அப்படிப்பட்ட ஒரு விரிவுரையாளரின் தேவை ஏற்பட்டது.

நான் முன்பே கூறியிருந்தபடி இன்றைய முஸ்லிம்களின் நிலை ஏன் இவ்வாறென்றால், இறைவனால் அனுப்பப்பட்ட திருக்குர்ஆனின் விளக்கத்தை நம்முன் எடுத்து வைத்தவரை நிராகரித்ததே ஆகும். எனவே முஸ்லிம்களின் வாழ்வு மற்றும் உம்மத்தின் மதிப்பு, மரியாதை ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களின் உண்மை நேசர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுவதைக் கேட்டு அதன்படி நடப்பதிலேயே இருக்கிறது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

உண்மை என்னவென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) மற்றும் மஹ்தி மஸீஹின் வேலை என்னவென்றால் அவர் போர்களை நிறுத்துவார். பேனா, துஆ மற்றும் (இறை)கவனத்தைக் கொண்டு இஸ்லாத்தை மேலோங்கச் செய்வார். மிகவும் வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால், மக்களுக்கு இந்த விஷயம் புரிவதில்லை. ஏனென்றால், எந்த அளவுக்கு உலகின் பக்கம் கவனம் உள்ளதோ அந்த அளவுக்கு கவனம் மார்க்கத்தின் பக்கம் இல்லை. மார்க்கம், உலகத்தின் அழுக்குகள் மற்றும் தூய்மையின்மையுடன் இணைந்த அவர்கள் மீது குர்ஆனின் ஞானம் திறக்கும் என்ற நம்பிக்கை எவ்வாறு உருவாகும்? திருக்குர்ஆனில் மிகவும் தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

**லா யமஸ்ஸுஹூ இல்லல் முதஹ்ஹரூன்** – தூய்மையாளர்களைத் தவிர அதை யாரும் தொட முடியாது. (56:80)

இது அஹ்மதிகளுக்கு நம் பொறுப்புகளின் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய விஷயம் ஆகும். இந்த அருளுக்குரிய மாதத்தில் ஒவ்வொரு அஹ்மதிகளும் இறைவனிடம் அவர்களுடைய உள்ளங்கள தூய்மையடைவதற்காகவும், திருக்குர்ஆனின் ஞானம் புரிவதற்காகவும், ஒரு உண்மையான மூஃமினிடம் இறைவன் எதிர்பார்க்கின்றானோ அதேபோல் ஆவதற்காக துஆ செய்து வர வேண்டும். எதன் விளக்கத்தை இந்த காலத்தில் இறைவனால் அனுப்பப்பட்டவர் நம்முன் எடுத்து வைத்துள்ளாரோ (அதைப் பின்பற்ற முயற்சி செய்ய வேண்டும்). அல்லாஹ் திருக்குர்ஆனின் அழகு மற்றும் போதனை, அதன் உயரிய பதவி பற்றி கூறியுள்ளான். அவை ஏராளமான இடத்தில் உள்ளன. அதன் ஒரு சில எடுத்துககாட்டுகளை உங்கள் முன் எடுத்து வைக்கிறேன். எவர் திருக்குர்ஆனின் அழகிய போதனைகளின்படி செயல்படுகின்றாரோ அவருக்கு அதன் மூலம் எப்படிப்பட்ட பதவி கிடைக்கிறது என்பது பற்றியும் கூறுகிறேன். எவர் தூய மனதோடு அதை புரிகின்றாரோ அல்லது புரிய விரும்புகின்றாரோ அவருக்கும் நல்ல பதவி உள்ளது. இது தொடர்பாக ஓர் அறிவிப்பு வருகிறது.

ஸஅத் பின் முஆஸ் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

எவர் திருக்குர்ஆனைப் படித்து அதன்படி செயல்பட்டாரோ கியாமத் நாளன்று அவருடைய தாய், தந்தைக்கு இரண்டு கிரீடங்கள் அணிவிக்கப்படும். அதனுடைய பிரகாசம் சூரியனுடைய பிரகாசத்தை விட அதிகமாக இருக்கும்.

அவருடைய தாய் தந்தையருக்கே பதவி இவ்வாறென்றால், எவர் குர்ஆனின்படி செயல்பட்டாரோ அவருடைய பதவி எவ்வாறிருக்கும்?

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

எவர் திருக்குர்ஆனுக்கு மதிப்பளிக்கின்றாரோ அவர் வானத்தில் மதிப்பளிக்கப்படுவார். இந்த மதிப்பு மரியாதை அதன்படி செயல்பட்டாலே கிடைக்கும். பிறகு இறைவனுடைய பதவி இந்த ஹதீஸின் மூலம் தெளிவாகிறது.

திருக்குர்ஆன் முழுமையான வேதம் மற்றும் அதன் அழகிய போதனைகள் தொடர்பாக **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்** கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆன் **காத்தமுல் குதூப்** – அதாவது வேதங்களிலெல்லாம் சிறந்த வேதம் மற்றும் முழுமையான வேதம் ஆகும். ஏடுகளில் மிகவும் சிறந்ததும் அழகியதும் ஆகும். இதனாலேயே அதனுடைய போதனைகளின் அடிப்படையை மிகவும் சிறந்த உயரிய இடத்தில் வைத்துள்ளது. மேலும் இது அனைத்து நிலைகளிலும் ஷரீஅத்தின் இயல்பை ஷரீஅத்தின் சட்டத்திற்கு துணையாக ஆக்கியுள்ளது. ஏனென்றால் வழிகேட்டிலிருந்து மக்களை பாதுகாப்பதற்காக அது முடிவெடுத்து விட்டது.

இதுபற்றி இறைவன் திருக்குர்ஆனில் பல இடங்களில் கூறியுள்ளான். எடுத்துக்காட்டாக, நோன்பின் கட்டளைகள் தொடர்பாக இறைவன் கூறுகின்றான்:

*அல்லாஹ் உங்களுக்கு எளிதை விரும்புகிறான். உங்களுக்கு கடினத்தை(த்தர) விரும்புவதில்லை. (2:186)*

இது ஒரு பொது அறிவிப்பு ஆகும். குர்ஆனின் போதனை மனித இயல்பிற்கு ஏற்பவாறே உள்ளது. மேலும் அது தொடர்பாக இவ்வாறு கூறப்பட்டுள்ளது. அதாவது இதில் முழுக்க முழுக்க எளிமையானதே உள்ளது. மனிதனுடைய சக்திக்கு ஏற்றவாறே வழங்கப்பட்டுள்ளன. இறைவன் கூறுகிறான். அதாவது இறைவன் மனிதனுக்கு துன்பத்தை விரும்புவதேயில்லை. எது உம்மை இறைவனுக்கு நெருக்கமானதாக ஆக்கிவிடுகின்றனவோ, அந்த உயர்ந்த பதவியை அடைவதற்கான போதனைகள் ஆகும்.

**பிறகு மற்றோரிடத்தில் இறைவன் கூறுகின்றான்:**

*நிச்சயமாக நாம் குர்ஆனை (நீங்கள் அறிந்து) நினைவு கூர்ந்து அறிவுரை பெறும்பொருட்டு எளிதாக ஆக்கியுள்ளான். எனவே அறிவுரையினைப் பெறுபவர் எவரேனும் உண்டா? (54:18,23,33,41)*

இந்த வசனத்தில் வெறும் அறிவுரை கூறியபின் முடிந்து விட்டது என்பதல்ல. மாறாக பொருள் என்னவென்றால், இந்த அறிவுரைகளை பற்றிப்பிடியுங்கள். மேலும் அதன்படி செயல்படுங்கள். இது துன்பமான போதனை என்ற எண்ணம் இருக்குமேயானால் இந்த எண்ணமும் தவறானதாகும். இது மனிதனைப் படைத்த இறைவனின் வார்த்தைகள் ஆகும். மேலும் ஒவ்வொரு மனிதனின் சக்தியைப் பற்றி அறிவும் அவனுக்கு உள்ளது. அந்த இறைவன் இந்த அறிவிப்பை செய்கிறான். அதாவது இதன் அறிவுரைகள், இதன் போதனைகளின்படி செயல்படுவது மனித இயல்பிற்கு ஒத்ததே ஆகும். எனவே இதற்குப் பிறகும் கூட இதன் போதனையின்படி நான் எவ்வாறு அமல் செய்ய முடியும் என்ற சிந்தனையில் இருக்கிறீர்கள்? எவ்வாறு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்களோ, அந்த போதனைகளின்படி செயல்படுவீர்களாயின் இறைவனின் அளவற்ற அருளுக்கு வாரிசாவீர்கள். பிறகு இந்த குர்ஆனில் பழைய சமுதாயங்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது. அதுவும் கூட அறிவுரை பெற வேண்டும் என்பதற்காகவே ஆகும். மேலும் உங்களுடைய அமல்களை இறைவனின் விருப்பத்திற்கேற்றவாறு செய்யுங்கள். ஏனென்றால் பழைய சமுதாயங்கள் மீது ஏற்பட்ட அழிவு மற்றும் இறங்கிய தண்டனையிலிருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகவேயாகும். பிறகு மற்றொரு வசனத்தில் இறைவன் கூறுகின்றான். இந்த குர்ஆனின் போதனைகள் எப்பொழுதும் நிலைத்திருக்கக் கூடியவைகள் ஆகும்.

**அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:**

*தூய்மையான வேதங்களை (அவர்களுக்கு)ப் படித்துக் காட்டக் கூடியவராகிய, அல்லாஹ்விடமிருந்து ஒரு தூதர் (அவர்களிடம் வரும் வரை தங்கள் தீமைகளிலிருந்து தவிர்ந்து கொள்பவர்களாக அவர்கள் இருந்ததில்லை). இதில் நிலைத்து நிற்கும் கட்டளைகள் உள்ளன. (98:34)*

இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பல இடங்களில் மிகவும் விளக்கமாக வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளார்கள். ஒரு மேற்கோளைப் படிக்கிறேன். அன்னார் கூறுகின்றார்கள். குர்ஆனைக் கொண்டு வருபவர் எந்த அளவுக்கு உயரியவர் என்றால் யத்லூ ஸுஹுஃபன் முதஹ்ஹரா.

குர்ஆன் எப்படிப்பட்டது என்றால் அனைத்து புத்தகங்களும், அனைத்து உண்மைகளும் இதில் அடங்கியுள்ளது. புத்தகம் என்பதன் பொருள், சாதாரண புரியக்கூடிய மிகச்சிறந்த விஷயங்கள் என்பதாகும். அதாவது எதை மனிதன் பின்பற்ற முடியும் என்று நினைக்கின்றானோ அவைகளாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

குர்ஆன் எப்படிப்பட்ட ஹிக்மத்கள் மற்றும் ஞானங்களை உள்ளடக்கியது என்றால் அதில் எந்தவிதமான தேவையற்ற விஷயங்களும் இல்லை. ஒவ்வொன்றையும் அது தானே விளக்குகிறது. மேலும் அனைத்து விதமான தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற பொருள்கள் அதில் உள்ளன. அதன் அனைத்து பகுதிகளும் ஒரு அடையாளமாகும். எவரேனும் இதை நிராகரித்தால் நாம் குர்ஆனின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் அதன் கண்ணியத்தை நிரூபித்துக்காட்ட தயாராக இருக்கின்றோம். இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அந்த சமயத்தில் Challenge செய்தார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இன்றைய நாட்களில் ஏகத்துவம் மற்றும் இறை இருப்பின் மீது மிகவும் பயங்கரமான தாக்குதல் நடக்கின்றன. மேலும் இக்காலத்திலும் இறை இருப்பிற்கு எதிராக ஏராளமான புத்தகங்கள் எழுதப்படுகின்றன. இந்தக் காலத்தில் அதிகமாக குர்ஆனை படிக்க வேண்டிய அவசியம் உள்ளது. கிறித்தவர்களும் அதிகமாக இதன் பக்கம் கவனம் செலுத்தினர். மேலும் எழுதினார்கள். ஆனால் அவர்கள் எழுதியவை அனைத்தும் இஸ்லாத்தின் இறைவனுக்கு எதிராக எழுதினார்கள். மரித்த சிலுவையில் அரையப்பட்ட, இயலாத தங்களுடைய கடவுளைப் பற்றி எழுதவில்லை. நாம் ஆணித்தரமாக் கூறுகிறோம். எவர் இஸ்லாத்தின் இறைவனுக்கு எதிராக எழுதுவதற்காக பேனாவை எடுக்கின்றாரோ அவர் கடைசியில் அந்த இஸ்லாத்தின் இறைவனின் பக்கமே வர வேண்டும். ஏனென்றால் திருக்குர்ஆனில் முழுக்க முழுக்க நாம் அது பற்றி காண்கின்றோம். நல்லியல்பு கொண்ட மனிதர்களின் நடைமுறை அந்த இறைவனின் பக்கமே செல்லும். ஆக அப்படிப்பட்டவர்களின் கால் இஸ்லாத்தின் மைதானத்தின் பக்கமே நடக்கும். இதுவும் தான் ஒரு மிகப்பெரிய பெருமையாகும். எவராவது குர்ஆனின் இந்த அற்புதத்தை நிராகரித்தால் ஒரே பக்கத்தைக் கொண்டு நம்மை சோதித்து விடுகின்றனர். அதாவது குர்ஆனை இறைவனுடைய வேதமாக ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் இந்த அறிவியல் காலகட்டத்தில் அப்படிப்பட்ட வாதம் செய்பவர் இறை இருப்பிற்கு சான்றுகள் எழுதட்டும். நாங்கள் அதை அனைத்து சான்றுகளையும் குர்ஆனிலிருந்து எடுத்துக் காட்டுவோம். இறைவனுடைய ஏகத்துவத்திற்கு சான்றுகள் எழுதினால் அந்த அனைத்து சான்றுகளையும் நாம் குர்ஆனிலிருந்து எடுத்துக் காட்டுவோம். அல்லது அந்த உண்மைகள் குர்ஆனில் இல்லை என்று வாதம் செய்தால் அவற்றை நாம் திருக்குர்ஆனிலிருந்து எடுத்துக்காட்டுவோம்.

எவ்வாறு உண்மை மற்றும் தெளிவானது என்பதை எடுத்துக் காட்டுவோம். அல்லது அசல் மற்றும் மார்க்கத்தின் இயல்பு பற்றி சான்றுகள் எழுத விரும்பினாலும் நாம் அனைத்து தரப்பிலும் நாம் குர்ஆனின் இந்த சிறப்பை நிரூபிப்போம். மேலும் அனைத்து தூய போதனைகளும் குர்ஆனில் இருக்கிறது என்பதை அவர்களுக்கு கூறுவோம். ஆக, குர்ஆன் எப்படிப்பட்ட வேதம் என்றால் எல்லாவிதமான ஞானங்களும் இவற்றில் உள்ளன. ஆனால் அவற்றைப் பெறுவதற்கு அதே தூய சக்தியின் தேவை உள்ளது என்பதை நான் பிறகு கூறுகிறேன்.

**லா யமஸ்ஸுஹு இல்லல் முதஹ்ஹரூன்**. ஆக, இது அனைத்தையும் உள்ளடக்கிய வேதம் ஆகும். மேலும் இதன்படி அமல் செய்கின்றார். இறை அருளால் எப்போதுமே நேர்வழியிலேயே இருக்கின்றார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விடுத்த இந்த அறைகூவல் இன்றும் உள்ளது. மாறாக

அன்னாரைப் பின்பற்றுபவர்கள் கூட இதன்படி அமல் செய்து குர்ஆனின் உண்மைத்துவம் அனைத்து காலத்திற்கும் உரியது என்பதை இவ்வுலகிற்கு நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். டாக்டர் அப்துஸ்ஸலாம் சாஹிப் எடுத்து வைத்த கருத்தும் கூட இறைவனின் ஏகத்துவம் திருக்குர்ஆனின் உண்மைத்துவத்தை நிரூபிக்கின்றது. எனவே இன்றும்கூட ஆராய்ச்சி செய்கின்ற அஹ்மதிகள் இந்த உண்மைத்துவத்தை முன்னிறுத்தி ஆராய்ந்தால் இறைவன் இன்ஷா அல்லாஹ் அவர்களுக்கு வழிகாட்டுவான். திருக்குர்ஆனில் இறைவன் நேர்வழி பெறுவது தொடர்பாக கூறுகிறான். இந்த குர்ஆனின் போதகைளில் ஆன்மீக நேர்வழியும் உள்ளது. மேலும் இனிமேல் வரவிருக்கின்ற அறிவுகளைப் பற்றிய வழிகாட்டுதலும் உள்ளது. அல்லாஹ் கூறுகின்றான்:

*மேலும் நான் குர்ஆனை படித்துக் காட்டுவதற்கும், (எனக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது). எனவே நேர்வழியினைப் பின்பற்றுபவர், தமக்காகவே அதனைப் பின்பற்றுகிறார். எவர் வழிதவறிச் செல்வாரோ அவரிடம் நான் எச்சரிக்கை செய்பவனேயாவான் என கூறுவீராக. (27:93)*

குர்ஆனைப் புரிவதற்கு தூய்மை ஒரு நிபந்தனையாகும். எதுவரை தூய்மையாக வில்லையோ அதுவரை திருக்குர்ஆனைப் புரியவும் முடியாது. பிறகு குர்ஆனின் மற்றொரு வாதம் என்னவென்றால், இதில் அனைத்தும் அடங்கியுள்ளன. அடிப்படை நடைமுறைகளிலிருந்து மிக உயர்ந்த அறிவு வரை இந்த கிதாபேமக்னூன் – மறைந்துள்ள வேதத்தில் அனைத்து விஷயங்களும் மறைந்துள்ளன.

இறைவன் சூரா யூனுஸ் அதிகாரத்தில் கூறுகின்றான்:

*நீங்கள் எந்த வேளையில் ஈடுபட்டிருந்தபோதிலும், திருக்குர்ஆனின் எந்தப் பகுதியை ஓதிய போதிலும், அல்லது ஏதாவது ஒரு பணியை (நீங்கள் அனைவரும்) செய்தபோதிலும் நீங்கள் அதில் மூழ்கியிருக்கும் நேரத்தில் நாம் உங்களை கவனித்துக் கொண்டிருக்கிறோம். மேலும் அணு அளவு பொருள்கூட பூமியிலோ, வானத்திலோ உம் இறைவனுக்கு மறைந்ததாக இல்லை. அதை விடச் சிறிதோ, பெரிதோ யாவும் தெளிவானதொரு நூலில் (பதிவாகி) இருக்கிறது. (10:62)*

இந்த வசனம் இறைவனின் மகத்துவத்தின் வெளிப்பாடு ஆகும். இறைவன் அனைத்து பொருட்களையும் கண்காணிக்கின்றான் என்பதன் வெளிப்பாடு ஆகும். மறைந்திருக்கின்ற, தொலைவிலுள்ள, அருகிலுள்ள, பெரிய, சிறிய ஆகிய அனைத்துப் பொருட்களும் இறைவனுடைய அருகில் உள்ளது. ஆக இந்த அறிவிப்பு மூஃமின்களுக்கும் காஃபிர்களுக்கும் ஆகும். இந்த மிகப்பெரிய வேதம் முழுமையான அறிவுடைய இறைவன் புறமிருந்து இறக்கப்பட்டுள்ளது. மேலும் இதில் அனைத்து வகையான அறிவுகள், சம்பவங்கள், எச்சரிக்கைகள், இதனை ஏற்றுக் கொண்டவர்களின் பொறுப்புகளைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. எனவே இந்த வேதம் இறங்கப்பட்ட பின்னர் இது ஒரு குறிப்பான வேதம் ஆகும். மேலும் இதன் அனுப்புதலையும் இறைவனே வைத்துள்ளான். இது இறங்கிய பின்னர் இதை நிராகரித்தவர்களுக்கும், இதனை ஏற்றுக் கொண்ட பின்னரும் இதன்படி அமல் செய்யாதவர்களும் எந்த சாக்குப்போக்கும் கூறும் வாய்ப்பு இல்லை. இதை ஏற்றுக் கொள்பவர்கள் எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும். எப்போது உண்மையை ஏற்றுக் கொண்டுள்ளீர்களோ அப்போது தங்களுடைய கிப்லாவையும் சரியாக வைக்க வேண்டும். தங்களுடைய நிய்யத் – எண்ணங்களையும் சரியான பாதையில் வைக்க வேண்டும். தங்களுடைய ஆன்மாவையும் அவ்வப்போது கண்காணித்து வர வேண்டும். நாங்கள் குர்ஆனைப் படிக்கிறோம் என்று கூறுவது மட்டும் போதுமானது அல்ல. நாங்கள் இதைக் கொண்டு உலகை அழைக்கின்றோம் என்று கூறுவதும் போதுமானது அல்ல. மாறாக இதை படிப்பதன் மூலம் நம்முள் என்ன மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதைப் பார்க்கும் அவசியம் உள்ளது. இந்த மாற்றங்களினால் மற்றவர்கள் நம்மிடமிருந்து என்ன தாக்கத்தை அடைகின்றனர் என்பதை பார்க்க வேண்டியது அவசியமாகும். அவர்களில் என்ன மாற்றங்கள் ஏற்படுகின்றன? அவர்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் எவ்வாறு ஈர்ப்பு, கவனம் ஏற்படுகிறது?

இறைவன் யாருடைய சொந்தக்காரனும் அல்ல. எப்பொழுது அவன் அனைத்து விஷயங்களையும் திருக்குர்ஆனில் திறந்து கூறிவிட்டானோ அப்போது அவன் தனது வாக்குறுதிக்கேற்ப காலத்தின் முஅல்லிமை (கற்றுக் கொடுப்பவரை) அனுப்பி விட்டானோ பிறகு இந்த விஷயத்தை ஏற்றுக் கொண்டுள்ளவர்கள் பதிலளிக்க வேண்டியிருக்கும். அவ்வாறு நீங்கள் இதன் போதனைகளை அவர்கள் மீது செயல்படுத்த முயற்சி எடுக்க வில்லையென்றால் ஏன் எடுக்கவில்லை? மேலும் குர்ஆனின கட்டளைகளுக்கும் பதிலளிக்க வேண்டியிருக்கும். அதனுக்கு பதில் அளிக்க வேண்டி வரும். எப்போது இவ்வாறு தெளிவான போதனைகள் மற்றும் அடையாளங்கள் வந்து விட்ட பின்னரும் இமாமை ஏன் ஏற்கவில்லை? எதுவரை உம்முல் கரீம் தொடர்புள்ளதோ அது இறைவனுடைய விவகாரமாகும். ஆனால் நாம் நமது செயல்களை சரியாக வைத்து இதனை ஓதி இதன்படி அமல் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். இறைவன் நமக்கு இதற்கான வாய்ப்பை தந்தருள்வானாக. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் திருக்குர்ஆனின் அருளைப் பற்றி கூறுகையில் கூறுகின்றார்கள்:

நம்மிடம் திருக்குர்ஆன் இல்லாமல் இருந்திருந்தால், ஹதீஸின் தொகுப்புகள் மட்டும் நம்பத்தகுந்ததாக இல்லாமல் இருந்தால் நாம் மற்ற சமுதாயத்திடம் வெட்கத்தால் முகத்தை தொங்க விட்டிருப்போம்.

நான் குர்ஆன் என்ற வார்த்தையின் மீது கவனம் செலுத்திய போது எனக்கு என்ன திறந்தது என்றால் இந்த அருளுக்குரிய வார்த்தையில் ஒரு மிகப்பெரிய முன்னறிவிப்பு உள்ளது. அது என்னவென்றால், இந்த குர்ஆனே படிப்பதற்கு தகுதியான வேதமாகும். மேலும் ஒரு காலத்தில் இந்த வேதமே படிக்கும் தகுதி வாய்ந்ததாக இருக்கும். எப்பொழுது மற்ற வேதங்களும் அதனுடன் படிக்க எடுத்துக் கொள்ளப்படுமோ அப்போது இஸ்லாத்தின் மானத்தைக் காப்பதற்காக பொய்யை விரட்டுவதற்காக இந்த ஒரு வேதம் மட்டுமே படிப்பதற்கு தகுதிவாய்ந்ததாக இருக்கும். மேலும் மற்ற வேதங்கள் முழுக்க முழுக்க விட்டுவிட தகுதிவாய்ந்தவைகளாக இருக்கும். புர்கானுக்கும் இதே பொருளே ஆகும். அதாவது இந்த ஒரு வேதம் உண்மை மற்றும் பொய்யில் வித்தியாசத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். மேலும் எந்த ஹதீஸ் கிரந்தங்களும், வேறு எந்த புத்தகமும் இந்த அளவு உயரிய தகுதியுடையதாக இருக்காது. எனவே இப்போது வேறு அனைத்து வேதங்களையும் விட்டுவிடுங்கள். மேலும் இரவு பகலாக இந்த குர்ஆனை படியுங்கள். எவர் குர்ஆனின் பக்கம் கவனம் செலுத்தவில்லையோ அவரும் மிகவும் நம்பிக்கை அற்றவர் ஆவார். மேலும் மற்ற புத்தகங்களின் பக்கம் இரவு பகலாக குனிந்து கிடக்கிறார். நமது ஜமாஅத்திற்கு குர்ஆனை ஆராய்வதில் உயிர் மற்றும் உள்ளத்துடன் முயற்சி செய்ய வேண்டும். மேலும் ஹதீஸுக்கு முன்னுரிமை வழங்குவதை நிறுத்த வேண்டும். குர்ஆனுக்கு கொடுக்க வேண்டிய முன்னுரிமையை ஹதீஸுக்கு கொடுக்கப்படுகிறது என்பது மிகவும் வெறுக்கத்தக்க ஒன்றாகும். இந்த வேளையில் குர்ஆனின் ஆயுதத்தை கையில் எடுங்கள். அவ்வாறு செய்வீர்களாயின் உங்களுடைய வெற்றி (உங்களிடம்) உள்ளது. இந்த ஒளிக்கு இந்த ஒளிக்கு முன் எந்த இருளும் நிற்க முடியாது. இங்கு ஒரு விளக்கத்தையும் கூறிவிடுகிறேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அதாவது ஹதீஸை விட்டு விடுங்கள். குர்ஆனைப் படியுங்கள். ஆனால் இன்னோரிடத்தில் கூறியுள்ளார்கள். எவரும் ஹதீஸின்படி மட்டும் செல்லாதீர்கள். குர்ஆனையும் எடுத்துக் கொள்ளுங்கள். பிறகு அன்னார் கூறுகிறார்கள்.

குர்ஆனை விட்டு விட்டு வெற்றி என்பது அடைய முடியாத ஒன்றாகும். மேலும் இதுபோன்ற வெற்றிகள் வெரும் எண்ணங்களே ஆகும். எதைப் பெறுவதற்கு இவர்கள் முயற்சி செய்கின்றார்கள். நபித்தோழர்களின் முன்மாதிரியை உடன் வைத்துக் கொள்ளுங்கள். பாருங்கள் எப்போது அவர்கள் இறைவனுடைய தூதருக்கு கீழ்படிந்தார்களோ மேலும் மார்க்கத்திற்கு உலகத்தை விட முன்னுரிமை வழங்கினார்களோ அப்போது அவர்களிடம் இறைவன் அளித்திருந்த அனைத்து வாக்குறுதிகளும் முழுமை அடைந்து விட்டன. ஆரம்பத்தில்

எதிரிகள் சிரித்து வந்தார்கள். வெளியே சுதந்திரமாக வர இயலவில்லை. மேலும் அரசர்களாக ஆவோம் என்று வாதம் செய்கின்றனர் என்று ஏளனம் செய்தனர். ஆனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படுவதில் தன்னை மாய்த்து நூற்றுக்கணக்கான ஆண்டுகளில் பெறாத (அருள்களைப்) பெற்றார்கள். ஆக இன்றும்கூட நமது வெற்றி குர்ஆனின் போதனைகளின்படி அமல் செய்வதிலே இருக்கிறது. இறைவன் நமக்கு இதற்கான வாய்ப்பை தந்தருள்வானாக. மேலும் அஹ்மதிகள் வெற்றிகளை மிக விரைவில் காணக்கூடிய வாய்ப்பை தந்தருள்வானாக.

இப்போது ஒரு வருத்தத்திற்குரிய செய்தியும் உள்ளது. கனடாவில் நமது முபல்லிக் முஹம்மது தாரிக் இஸ்லாம் இரண்டு நாட்களுக்கு முன் காலமாகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். இவர்களின் வயது 54 ஆகும். இதயத்தில் கேன்சர் உருவானதால் மரணம் ஏற்பட்டது. இவர்கள் 1978 -ல் ஷாஹித் தேர்வில் வெற்றி பெற்றார்கள். அதன் பிறகு பாகிஸ்தானில் பல்வேறு இடங்களில் இருந்தார்கள். பிறகு அவர்கள் ரப்வாவில் வகாலத்தே உலியா விலும் வேலை செய்து வந்தார்கள். இவர்களை இத்தாலிக்கு அனுப்பப்பட்டார்கள். விசா கிடைக்காத காரணத்தால் திரும்ப வந்து விட்டார்கள். பிறகு வகாலத்தே தப்ஷீரிலும் வேலை பார்த்து வந்தார்கள். பிறகு 1993 லிருந்து கனடாவில் தொண்டாற்றி வந்தார்கள். மிகவும் நன்னடத்தை உடையவரும் மிகவும் அன்பு செலுத்தக்கூடியவராகவும் இருந்து வந்தார்கள். தங்களுடைய நெருங்கியவர்கள், உறவினர்கள், ஏழைகள் அனைவருடனும் நல்ல முறையில் நடந்து கொள்பவர்களாக இருந்தார்கள். ஒவ்வொரு அஹ்மதிக்கும் இருக்கின்ற ஒவ்வொரு முரப்பிகளுக்கும் இருக்கின்ற, இருக்க வேண்டிய அன்பு இவரிடம் இருந்தது. எப்போதும் எந்த Complaint ம் இருந்ததில்லை. மிகவும் கடின உழைப்புடன் நுண்ணிய வேலை பார்த்து வந்தார்கள். நான் எப்போதெல்லாம் கனடா சுற்றுப்பயணத்தில் இருந்தேனோ அப்போது முலாக்கத்திற்காகவும், Private Secretary -ன் அலுவலகத்திலும் duty கொடுத்து வந்தார்கள். மிகவும் சந்தோஷத்துடனும் கடின உழைப்புடனும் வேலை பார்த்து வந்தார்கள். இறைவன் இவரது தர்ஜாக்களை (பதவிகளை) உயர்த்துவானாக. இவரை மன்னிப்பானாக. இவருக்கு மனைவியும் ஐந்து மகள்களும் இருக்கின்றனர். இரண்டு மகளுக்கு திருமணம் நடந்து விட்டது. சிறிய மகளுக்கு 12 வயதாகிறது. இவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். இறைவன் பொறுமை மற்றும் தன்னம்பிக்கை அளிப்பானாக. மேலும் அவர்கள் அனைவரையும் அவனுடைய பாதுகாப்பு மற்றும் அமைதியில் வைப்பானாக. ஆமீன். மஜீத் ஸியால்கோட்டி சாஹிப். இவர் தாரிக் இஸ்லாம் சாஹிபின் சகோதரியை மணமுடித்தவர். இங்கு முபல்லிக்காக இருக்கிறார். மேலும் இவர்களின் ஒரு சகோதரர் ஹாபிஸ் தய்யூப் அஹ்மத் சாஹிப் ஆவார்கள். அவர்கள் கானாவில் இருக்கிறார்கள். அவர்கள் ஜனாஸாவில் கலந்து கொள்ள இயலவில்லை. இறைவன் அனைத்து உறவினர்களுக்கும் பொறுமையை வழங்குவானாக. இப்போது ஜுமுஆ தொழுகைக்குப் பின் இவருடைய ஜனாஸா காயிப் நடைபெறும்.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 11.09.2009

Translated by : **Maulavi B. TAHIR AHMAD**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**